முருகப்பெருமான் துணை

**மகான் யூகிமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.04.2024**, புதன்கிழமை

1. அன்னதான வள்ளலே அரங்கா
   ஆறுமுகனார் அவதார தேசிகா
   மன்னவனாய் வந்த குருவே
   மாதவ ராஜனே ஞான வள்ளலே
2. வள்ளலே உன்பெருமை கூறி
   வரமென சோபகிருது சேல்திங்கள்
   வல்லமைபட எழுநான்குதிகதி புந்தி வாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 28 ம் நாள், 10.04.2024, புதன்கிழமை)
   வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை யூகிமுனிவர் யானும்
   அறிவிப்பேன் உலகநலம்பெற
   ஆசிதந்து அரங்கமகான் காட்டும்
   ஆற்றல் மிக்க ஞான வழிகளை
4. வழிகளை ஏற்று மக்கள் வர
   வணங்கி அரங்கன் பதம் பற்ற
   அழியாமைக்கான சூட்சும பலமும்
   அனைவரும் கண்டுத் தேறியே
5. தேறியே சன்மார்க்க வழிகளில்
   தெய்வ பலம் கண்டு உணர்ந்து
   மாறிடும் ஞானயுக காலத்தில்
   மகத்துவம்பல கண்டடையும் வண்ணம்
6. வண்ணமுடன் சேவைபல ஆற்றி
   வகைபட அரங்கன் கொள்கைகளை
   மண்ணுலகம் எங்கும் கொண்டு சென்று
   மாதவ தரும பலமாக சக்திகளை
7. சக்திகளை மக்களிடைப் பரப்பி
   சரணாகதி சகலரும் அடைய
   சக்தி நிலையை உருவாக்கிட
   சாமானியர்க்கும் ஞானம் அடைய

8. அடைய அனைத்து வரங்களும்
அரங்கனால் தரப்பட இருக்க
தடையற உலகோர் வந்தடைந்து
தவசியிடம் தீட்சை ஏற்க

9. ஏற்கவே சித்திகள் வடிவாக
எல்லாம் வந்து கலந்து
அற்புதம் தனை கலியுகமக்கள்
அடைந்து ஞானிகள் ஆவர்

10. ஆகவே உலகமாற்றம் தனை
அரங்கன் ஞானப்படைகள்
மிகையாகவே உலகில் அற்புதம்
மேலவர்கள் வழி நடந்தேறும் என்பேன்

11. என்கவே ஞான ஆட்சி
எல்லாம் ஞானிகள் ஆட்சியாக
சண்முகனார் வெளிப்பட நடக்கும்
நாட்டிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—